**டிசம்பர் – 10**

# TNPSC துளிகள்

- ஒரு தனியார் வானிலைக் கண்காணிப்பு நிறுவனமான ஸ்கைமெட் ஆனது கோடைப் பருவப் பயிர்க் (காரீப் பயிர்கள்) கண்ணோட்டம் குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, 2018-19 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பருத்தியைத் தவிர்த்து, மற்ற கோடைப் பருவப் பயிர்கள் 4.5% முதல் 12% வரை வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- வைரஸ் மூலம் வயிற்றுப் போக்கை எதிர்கொள்வதற்காக ஹைதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனமானது, அதன் மேம்பட்ட ரோட்டா வைரஸ் தடுப்பூசியான ரோட்டாவாக் 5 டி என்ற ஒரு தடுப்பூசியை அறிமுகப் படுத்தியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## தேசியப் பெண்கள் தொழில்முனைவோர் கரிமத் திருவிழா

- ஒரு தனித்துவமான கூட்டு முயற்சியாக மத்திய உணவுப் பதப்படுத்துதல் தொழில் துறை அமைச்சகம் மற்றும் மத்தியப் பெண்கள் & குழந்தைகள் நல மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆகியவை தேசியப் பெண்கள் தொழில் முனைவோர் கரிமத் திருவிழாவை இணைந்து நடத்துவதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்தத் திருவிழாவானது ஹரியானாவில் உள்ள தேசிய உணவுத் தொழில்நுட்ப தொழில் முனைவோர் மற்றும் மேலாண்மை நிறுவனத்தினால் (National Institute of Food Technology Entrepreneurship and Management - NIFTEM) திட்டமிடப்பட்டு, நடத்தப்பட இருக்கின்றது.
- NIFTEM என்பது இந்திய அரசின் மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில் துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு கல்விசார் நிறுவனமாகும்.
- இந்தத் திருவிழாவானது இந்தியப் பெண் தொழில்முனைவோர் & விவசாயப் பொருள்களை வாங்குபவர்களுடன் சேர்த்து விவசாயிகளை இணைப்பதற்கு ஊக்குவிப்பதையும் நிதி உள்ளடக்கல் மூலம் பெண்கள் தொழில்முனைவோருக்கு அதிகாரம் அளிப்பதையும் இந்தியாவில் கரிம உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.



## மின்னணு சிகரெட்டுகளுக்குத் தடை மீதான மசோதா – நிறைவேற்றம்

- மின்னணு சிகரெட்டுகளுக்குத் தடை மீதான (உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, போக்குவரத்து, விற்பனை, விநியோகம், சேமிப்பு மற்றும் விளம்பரம்) மசோதா, 2019 ஆனது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 3 அன்று நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப் பட்டுள்ளது.
- மின்னணு சிகரெட்டுகளின் உற்பத்தி, சேமிப்பு, வர்த்தகம் மற்றும் விளம்பரம் ஆகியவற்றைத் தடை செய்ய முற்படும் இந்த மசோதாவானது 2019 ஆம் ஆண்டு செப்டம்பரில் பிறப்பிக்கப் பட்ட அவசரச் சட்டத்தை மாற்றுகின்றது.

*பின்புலம்*

- 2025 ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிப்பதற்கான ஒரு இலட்சிய இலக்கை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.
- ஏற்கெனவே 16 மாநிலங்கள் மின்னணு சிகரெட்டைத் தடை செய்துள்ளன.

## ஆன்லைனில் மருந்துகள் விற்பதற்கு மத்திய அரசு தடை விதிப்பு


- தில்லி உயர்நீதிமன்ற உத்தரவின் படி, உரிமம் பெறாத ஆன்லைன் (நிகழ்நேர) தளங்கள் மூலம் மருந்துகள் விற்பனை செய்யத் தடை விதிக்குமாறு அனைத்து மாநிலங்களுக்கும் ஒன்றியப் பிரதேசங்களுக்கும் இந்தியப் பொது மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையம் (Drugs Controller General of India - DCGI) உத்தரவிட்டுள்ளது.
- 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் (Drugs and Cosmetics - D&C) சட்டத்தின் விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு ஆன்லைனில் மருந்துகள் விற்பனை செய்யப் பட்டதாக தில்லி உயர் நீதிமன்றம் கூறியிருக்கின்றது.
- D&C சட்டம், 1940 மற்றும் D&C விதிகள் 1945 ஆகியவற்றின் கீழ், போலி மருந்துகளை விற்பனை செய்வது தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க மாநிலத்தில் உள்ள உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## உலகளாவிய இராஜதந்திரக் குறியீடு 2019

- 2019 ஆம் ஆண்டின் உலகளாவிய இராஜதந்திரக் குறியீட்டை சிட்னியைச் சேர்ந்த லோவி நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது சமீபத்திய புள்ளி விவரங்களையும் உலகின் இராஜதந்திர உறவுகள் (அமைப்புகள்) எவ்வாறு விரிவடைகின்றன மற்றும் சுருங்கி வருகின்றன என்பதையும் குறிக்கின்றது.
- இந்தக் குறியீடானது உலகெங்கிலும் உள்ள 61 நாடுகளைத் தரவரிசைப் படுத்தி இருக்கின்றது.
- இந்தக் குறியீட்டில் சீனாவும் அமெரிக்காவும் முதலிடங்களில் உள்ளன.
- 61 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் இந்தியா 12வது இடத்தில் உள்ளது.

GLOBAL DIPLOMACY INDEX




## நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு

- இந்தியப் பொதுச் சுகாதார அமைப்பை (Public Health Foundation of India - PHFI) சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் நடத்தப் பட்ட புதிய ஆய்வின் படி, தனியார் துறையில் நுண்ணுயிர்க் கொல்லி தொடர்பான மருந்துகளைப் பரிந்துரைக்கும் விகிதம் அதிகமாக உள்ளது.

| DISEASE | ANTIBIOTIC PRESCRIPTIONS (In per cent) |
|---|---|
| Acute upper respiratory infections | 20.4 |
| Acute lower respiratory infection | 12.8 |
| Disorders of urinary system | 6.0 |
| Cough | 4.7 |
| Acute nasopharyngitis | 4.6 |
| Acute pharyngitis | 3.9 |
| Acute bronchitis | 3.4 |
| Injury, poisoning and others | 3.9 |
| Cutaneous abscess | 2.3 |
| Asthma | 2.2 |

- வெளிநோயாளிகளுக்கு நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளின் பரிந்துரைப்பு விகிதங்கள் மற்றும் தனியார் துறையில் உள்ள நுண்ணுயிர்க் கொல்லி மருந்து முறைகள் ஆகியவை பற்றிய முதலாவது மதிப்பீடு இதுவாகும்.
- தனியார் துறையானது அதிக அளவு நுண்ணுயிர்க் கொல்லி மருந்து விகிதங்களைக் கண்டுள்ளது (வருடத்திற்கு 1,000 நபர்களுக்கு 412 என்ற அளவில்).
- இந்த விகிதமானது 0 முதல் 4 வயதுடைய குழந்தைகளிடையே (1,000 நபர்களுக்கு 636 என்ற அளவில்) அதிகமாகவும் 10 முதல் 19 வயதுக்கு உட்பட்டவர்களிடையே மிகக் குறைவாகவும் (1,000 நபர்களுக்கு 280 என்ற அளவில்) காணப் படுகின்றது.

## CSIRன் அணு காந்த ஒத்ததிர்வு பரிசோதனை - அமெரிக்காவின் USFDA சான்றிதழ்

- ஹைதராபாத்தில் உள்ள அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் – இந்திய வேதியியல் தொழில்நுட்ப நிறுவனமானது (CSIR - Indian Institute of Chemical Technology), அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் CSIRன் அணு காந்த ஒத்ததிர்வு பரிசோதனைக்கு (Nuclear Magnetic Resonance - NMR) அனுமதி அளித்துள்ளதாக அறிவித்துள்ளது.
- தற்போதைய சிறந்த உற்பத்தி நடைமுறைகள் தொடர்பாக இந்த ஆய்வானது நடத்தப் பட்டது. இந்தச் சோதனையின் போது "எந்த நடவடிக்கையும் தொடங்கப்படவில்லை" என்று இதற்குச் சான்றிதழ் வழங்கப் பட்டது.

***NMR***

- அணு காந்த ஒத்ததிர்வு என்பது ஒரு மாதிரியின் தூய்மை மற்றும் அதன் மூலக்கூறு அமைப்பு ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்காக உள்ள ஒரு பகுப்பாய்வு உத்தியாகும்.
- அணுக் கருக்களைச் சுற்றியுள்ள உட்புற காந்தப் புலங்களைக் கண்காணிப்பதற்காக இந்த உத்தி பயன்படுத்தப் படுகின்றது.
- உயிர் வேதியியலாளர்கள் புரதங்கள் மற்றும் பிற சிக்கலான மூலக்கூறுகளை அடையாளம் காண NMR உத்தியைப் பயன்படுத்துகின்றனர்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## புலிகளின் முக்கியமான 32 பெருவழிப் பாதைகள் – கண்டுபிடிப்பு

- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையமானது (National Tiger Conservation Authority - NTCA), "ஒரு நீண்டகால பாதுகாப்பிற்காக புலிகளை இணைத்தல்" என்ற தலைப்பில் ஒரு ஆவணத்தை வெளியிட்டுள்ளது.
- NTCA ஆனது டேராடூனில் உள்ள வனவிலங்கு நிறுவனத்துடன் (WII - Wildlife Institute of India) இணைந்து இந்த ஆவணத்தை வெளியிட்டுள்ளது.
- இந்த ஆவணமானது புலிகளின் முக்கியமான 32 பெருவழிப் பாதைகளை குறிப்பிட்டுக் காட்டுகின்றது. இது வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972ன் கீழ் புலிகளின் பாதுகாப்புத் திட்டத்தை விவரிக்கின்றது.
- 2006 ஆம் ஆண்டு முதல் புலிகளின் எண்ணிக்கையானது ஒவ்வொரு ஆண்டும் 6 % என்ற அளவில் அதிகரித்து வருகின்றது.

### குறைந்த அளவு மீத்தேன் வாயுவை உமிழும் ஆடுகளை இனப்பெருக்கம் செய்தல் - நியூசிலாந்து

- நியூசிலாந்து கால்நடைத் தொழில் துறையானது "உலகளாவிய முதலாவது" மரபணுத் திட்டமான "மாட்டிறைச்சி + ஆட்டுக்குட்டி நியூசிலாந்து (Beef + Lamb New Zealand - B+LNZ) மரபியல்" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது. இது ஒரு புதிய "மீத்தேன் ஆராய்ச்சி இனப் பெருக்க முறையை" அறிமுகப்படுத்தியுள்ளது.
- குறைந்த அளவு மீத்தேன் வாயுவை உமிழும் ஆடுகளை இனப்பெருக்கம் செய்வதன் மூலம் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு இது உதவ இருக்கின்றது.
- ஓசோன் அடுக்கில் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்காக மரபணு மாற்றம் செய்யப் பட்ட இந்த மேய்ச்சல் விலங்குகளைப் பயன்படுத்த முடியும்.
- நியூசிலாந்தில் ஒவ்வொரு நபருக்கும் சுமார் ஆறு ஆடுகள் உள்ளன. மேலும் அந்நாட்டின் மொத்தப் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தில் கால்நடைத் தொழிலானது மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது.

## மாநிலச் செய்திகள்

### பஞ்சாப் - நில வங்கிகள்

- கிராமப் புறங்களில் நில வங்கிகளை உருவாக்கும் நோக்கத்துடன், கிராமப் புறங்களில் உள்ள பொது நிலங்களை மாநில தொழில் துறைக்கு மாற்றுவதற்கான சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு பஞ்சாப் அமைச்சரவை கொள்கை ரீதியிலான ஒரு ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இந்தத் திருத்தமானது கிராமப் பஞ்சாயத்துகளுக்கு 'ஷாம்லத்' அல்லது கிராமப் பொது நிலத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் கிராமங்களின் வளர்ச்சியை மேம்படுத்த உதவ இருக்கின்றது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### சர்வதேச இந்தியப் பத்திரிக்கை நிறுவன விருது

- பத்திரிகைத் துறையில் சிறந்து விளங்கியதற்காக இந்தியாவின் தனியார் செய்தி நிறுவனமான என்டிடிவிக்கு சர்வதேச இந்தியப் பத்திரிக்கை நிறுவன விருது வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதானது வியன்னாவில் உள்ள சர்வதேசப் பத்திரிகை நிறுவனத்தின் (International Press Institute - IPI) இந்திய அலுவலகத்தினால் வழங்கப் பட்டுள்ளது.


***IPI பற்றி***

- இந்த வருடாந்திர விருதானது IPI இந்தியா என்ற அமைப்பினால் 2003 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இது ஒரு இந்திய ஊடக நிறுவனம்/ பத்திரிகையாளரால் மேற்கொள்ளப்பட்ட சிறந்த படைப்புகளை அங்கீகரித்து கௌரவிக்கின்றது.

# முக்கிய தினங்கள்

## இனப் படுகொலையைத் தடுத்தல் மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்களின் கௌரவம் மற்றும் அனுசரிப்பு மீதான சர்வதேச தினம் - டிசம்பர் 09

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இத்தினத்தை நிறுவியுள்ளது.
- டிசம்பர் 9 ஆம் தேதியானது 1948 ஆம் ஆண்டின் இனப் படுகொலைக் குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டித்தல் மீதான ஒப்பந்தத்தை ("இனப் படுகொலை ஒப்பந்தம்") ஏற்றுக் கொண்ட ஆண்டின் நினைவு தினமாகும்.
- இந்த ஆண்டானது இந்த ஒப்பந்தத்தின் 70வது ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது
- இத்தினமானது இனப் படுகொலை ஒப்பந்தத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இனப் படுகொலையின் குற்றத்தை எதிர்ப்பதிலும் தடுப்பதிலும் அதன் பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் - டிசம்பர் 09

- சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினமானது ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 09 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகின்றது.
- ஊழல் பற்றியும் அதை எதிர்த்துப் போராட மக்களால் என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றியும் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது கொண்டாடப் படுகின்றது.
- இந்தத் தினமானது ஐ.நா பொதுச் சபையால் 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்த ஒப்பந்தமானது டிசம்பர் 2005 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- இந்தத் தினமானது உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (United Nations Development Program - UNDP) மற்றும் போதைப் பொருள் & குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் (United Nations Office on Drugs and Crime - UNODC) ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப் படுகின்றது.
- இந்தத் தினமானது ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின் கீழ் உலகம் முழுவதும் கொண்டாடப் படுகின்றது. இது 2030 ஆம் ஆண்டின் நீடித்த வளர்ச்சிக்கான

இலக்கைத் தலைமையாகக் கொண்டு ஊழலுக்கு எதிரான உலகளவிலான ஒரு போராட்டத்தை ஊக்குவிக்கின்றது.

❖ 2018-2019 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, “ஊழலுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைவோம்” என்பதாகும்.




## இதரச் செய்திகள்

### சக்தி பட் முதல் புத்தக பரிசு 2019

❖ ஆங்கில எழுத்தாளரான டோனி ஜோசப் என்பவர் தனது 2018 ஆம் ஆண்டின் ‘ஆரம்ப கால இந்தியர்கள்: எங்கள் மூதாதையர்களின் கதை மற்றும் நாங்கள் எங்கிருந்து வந்தோம்’ என்ற புத்தகத்திற்காக 12வது ‘சக்தி பட் முதல் புத்தகப் பரிசை’ வென்று உள்ளார்.

❖ இது தெற்காசிய நாடுகளில் உள்ள ‘அனைத்து வகைகளிலும் மிகச் சிறந்து வழங்கும் புதிய படைப்புகளை’ அங்கீகரிக்க முற்படுகின்றது.

❖ 2018 ஆம் ஆண்டில், இந்தியாவில் உள்ள சுஜாதா கிட்லா என்பவருக்கு ‘யானைகள் மத்தியில் எறும்புகள்: தீண்டத்தகாத குடும்பம் மற்றும் நவீன இந்தியாவைக் கட்டமைத்தல்’ என்ற புத்தகத்திற்காக இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★